***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 21/2012**

P.W.1 திரு.அன்வர்பாட்ஷா த/பெ.அல்லாபிச்சை நாள் – 27.11.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**1, 21, 22 பிதிரவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

23.07.1997 ல் ஒரு சொத்தை சையது இப்ராஹிம்மிற்கு கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சாட்சி நானும், என் அண்ணனும் சேர்ந்து தான் கிரயம் கொடுத்தோம் என்று பதில் அளிக்கிறார் . சாட்சி ஒப்புக்கொண்டதன்பேதில் 23.07.1997 ம் தேதிய கிரய பத்திரம் சான்றிட்ட நகல். பிரதிவாதிகள் 1, 2, 22 தரப்பில் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.01.2008 ல் முகமது தௌபிக் என்பவருக்கு ஒரு சொத்தை நான் கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் 04.01.2008 தேதிய கிரய பத்திரம் மேற்படி **பி.வா.சா.ஆ.2** ஆகும். 23.07.2008 ல் விடங்கர் மகன் பாஸ்கர் என்பவருக்கு நான் ஒரு சொத்தை கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் 23.07.2008 தேதிய கிரய பத்திரம் மேற்படி **பி.வா.சா.ஆ.3** ஆகும். 23.07.2008 ல் ராஜலிங்கம் மகன் விஜயகுமார் என்பவருக்கு நான் ஒரு சொத்தை கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் 23.07.2008 தேதிய கிரய பத்திரம் மேற்படி **பி.வா.சா.ஆ.4** ஆகும். 23.07.2008 ல் புன்னியநாதன் மகள் ஷோபா என்பவருக்கு நான் ஒரு சொத்தை கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் 23.07.2008 தேதிய கிரய பத்திரம் மேற்படி **பி.வா.சா.ஆ.5** ஆகும். 23.07.2008 ல் ரவிச்சந்திரன் மகள் ஹேமலதா என்வருக்கு ஒரு சொத்தை கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் 23.07.2008 தேதிய கிரய பத்திரம் மேற்படி **பி.வா.சா.ஆ.6** ஆகும். 23.07.2008 ல் நடேசன் மகன் விஸ்வலிங்கம் என்வருக்கு ஒரு சொத்தை கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் 23.07.2008 தேதிய

கிரய பத்திரம் மேற்படி **பி.வா.சா.ஆ.7** ஆகும். 23.07.2008 ல் ஞானசேகரன் மனைவி தமிழ்செல்வி என்வருக்கு ஒரு சொத்தை கிரயம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் 23.07.2008 தேதிய கிரய பத்திரம் மேற்படி **பி.வா.சா.ஆ.8** ஆகும். மேற்படி ஆவணங்களில் எனக்கும் , என் சகோதரனுக்கும் 23.02.1997 ல் சொத்துக்களைப்பொறுத்து பாகம் ஏற்பட்டதை ஒப்புக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல . எனக்கும், என் அண்ணனுக்கும் முன்பே பாகப்பிரிவினை ஏற்பட்டு, அதன்மூலம் எனக்கு கிடைத்த சொத்துக்களை விற்றுவிட்டு, தற்போது என் அண்ணனுடைய பாகத்தில் பங்கு கேட்கிறேன் என்றால் சரியல்ல . புதுக்கோட்டை அசோக் நகரில் உள்ள சொத்துக்கள் யார் பெயரில் கிரயம் என்றால் சாட்சி என் அண்ணன் பெயரில் கிரய பத்திரம் உள்ளது, அதற்கு காரணம் என்னுடைய பெயரிலும், என் அண்ணன் பெயரில் இருந்த சொத்துக்களை விற்று தான் , அந்த பணத்தை கொண்டு தான் என் அண்ணன் பெயரில் சொத்துக்கள் கிரயம் வாங்கப்பட்டது. என் அண்ணன் பெயரில் உள்ள கிரய பத்திர நகலை வாங்கி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி ஞாபகமில்லை என்று பதில் அளிக்கிறார் . இந்த வழக்கில் B–அட்டவணை சொத்துக்களுக்கான ஆவணங்களை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . நாளது தேதி வரை புதுக்கோட்டை நகரில் உள்ள B அட்டவணை சொத்தை பொறுத்து என் பெயரில் அக்ரீமென்ட் , என் அண்ணன் பெயரில் கிரயப்பத்திரம் ஏற்பட்டது . அந்த அக்ரீமென்ட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி இல்லை என்று பதில் அளிக்கிறார் . இவ்வழக்கின் எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். B அட்டணை சொத்துக்கள் 1–ம் பிரதிவாதியின் மனைவியான 2–ம் பிரதிவாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்பட்டுள்ளது , ஆனால் அது தவறு . B அட்டவணை சொத்துக்களுக்கு கிரயப்பத்திரம் , பட்டா ஆகிய ஐந்து ஆவணங்களும் 2–ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சாட்சி அதுபற்றி எனக்கு தெரியாது என்று பதில் அளிக்கிறார் . நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 2–ம் பிரதிவாதி வேறு நபர்களுக்கு B அட்டவணைச்சொத்தை கிரயம் கொடுத்ததற்கான நகல்கள் என்றால் சரிதான், சொத்து தவறுதலாக விற்பனை செய்கிறார் என்பதை காண்பிப்பதற்காக அந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்று

பதில் அளிக்கிறார் . இந்த வழக்கை பாகப்பிரிவினைக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகப்பிரிவினை வேண்டுமென்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை . இந்த வழக்கு சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்ய எந்த வழக்குமூலமும் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல . வழக்குமூலம் சொல்லப்படாமலேயே தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல . என் மனைவி பெயரில் தனியாக சொத்துக்கள் இருக்கிறது என்றாலும், அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல . 2-ம் பிரதிவாதி நபீஷாபீவி பெயரில் உள்ள சொத்துக்களை பொறுத்து நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றாலும், ஏனெனில் பினாமி ஒழிப்பு சட்டம் வந்துவிட்டதால் நான் உரிமை எதுவும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. B அட்டவணை சொத்துக்கள் யாவும் 2-ம் பிரதிவாதி அவரது சொந்த பணத்தை கொண்டு அவர் பெயரில் அவர் கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்றாலும், அதில் நான் உரிமை கோர இயலாது என்றாலும் சரியல்ல. சேகுபீவிக்கு சொந்தமான தங்க வளையல்கள், தங்க மாலை, என்று 110 பவுன் மற்றும் சேமிப்பு பணம் ஆகியவற்றை நான் அபகரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல . என்னுடைய முதல்விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உண்மைக்குபுறம்பான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் , முறைப்படி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*